## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

வீதி அபிவிருத்தி அதிகார சபையின் (''அதிகார சபை'') 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் பொழிப்பாக்கிய முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளையும் உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையில் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அதிகாரசபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, அதிகாரசபை தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது அதிகாரசபை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

அதிகாரசபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதிகாரசபை அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு)

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி ஆணைக்குழுவின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.
- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய

தொடர்ந்து செயற்படுவதற்கு கல்லூரிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் ஆணைக்குழுவின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாகவும் அவசியமானதாகவும் கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- அதிகாரசபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- அதிகாரசபை ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் அதிகார சபை இணங்கியிருந்ததா என்பதும்,

- அதிகாரசபையின் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- அதிகாரசபையின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக் கூற்றுக்கள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடனான இணக்கமின்மைகள்

| குறித்த நியமம் தொடர்பாக இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) இலங்கை பொது துறை கணக்கீட்டு நியமம் 07 இன் பிரகாரம், ஒவ்வொன்றிற்கும் வேறுப்பட்ட பயன்படு ஆயுட்காலத்தினை உடைய அதிவேக வீதிகளின் வெவ்வேறு உப பகுதிகள் தொழிற்சார் மதிப்பீட்டின் | குறித்த தேய்வு வீதத்திற்காக தொழில்சார் மதிப்பீடொன்று பெற்றுக் கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டது. | அதிவேக வீதியொன்றின் பல்வேறு உப பகுதிகளின் ஆயுட்காலம் ஒவ்வொன்றிற்கும் வேறுப்பட்டவை என அவதானிக்கப்படுகி- |

| | | |
|---|---|---|
| அடிப்படையில் பெறுமானதேய்வு வீதம் தீர்மானிக்கப்பட்டு தேய்வு செய்யப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | ன்றமையினால் அப் பகுதிகள் பொருத்தமான வீதங்களின் கீழ் தேய்மானம் செய்யப்படல் வேண்டும். |
| (ஆ) இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமம் 01 இல் குறிப்பிடப்பட்டுள்ள நியமங்களுக்கு முரணாக உத்தரவாத காலப்பகுதி 2022 ஆம் ஆண்டில் அல்லது அதற்கு முன்னர் முடிவடைவதற்கிருந்த 54 செயற்திட்டங்களுக்கு தொடர்புடைய ரூபா 21.37 மில்லியன் பிடிப்பணம் மற்றும் ஆண்டில் தீர்க்கப்படுவதற்குள்ள ரூபா 659 மில்லியன் செலுத்த வேண்டிய கடன் தவணை நடைமுறை அல்லா பொறுப்புக்களின் கீழ் நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. அவ்வாறே எதிர்வரும் மாதத்தில் தீர்க்கப்படவுள்ள ரூபா 51.53 மில்லியன் பணி தொடக்க முற்பணம் நடைமுறையல்லா சொத்தின் கீழ் குறிப்பிடப்பட்டிருந்தது. அதிகார சபையின் ஊடாக செயல்படுத்தப்பட்ட 100,000 கி.மீ வீதி செயற்திட்டத்தின் கீழான செலுத்தப்பட வேண்டிய பிடிப்பணம் ரூபா 3,671 மில்லியனில் 60 சதவீதம் நடைமுறை பொறுப்பாகவும் எஞ்சிய 40 சதவீதம் நடைமுறையல்லா பொறுப்பாகவும் அச் செயற்திட்டத்திற்குரிய பணி தொடக்க முற்பணமான ரூபா 13,347.5 மில்லியனில் முறையே 75 சதவீதம் மற்றும் 25 சதவீம் நடைமுறை மற்றும் நடைமுறையற்ற சொத்தாகவும் அடிப்படையொன்று இன்றி பிரிக்கப்பட்டு நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் அவ்வாறு ஏற்படாதிருக்க பார்த்துக் கொள்ளுமாறு குறித்த உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது. | நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்படும் போது கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் நடைமுறை மற்றும் நடைமுறையற்ற சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் சரியாக இனங்காணப்படுதல் வேண்டும். |
| (இ) 2021 சனவரி 01 ஆந் திகதியாகையில் அதிகார சபைக்கு சொந்தமான கிரயம் ரூபா 394.9 மில்லியனான 155 வாகனங்கள் மற்றும் கிரயம் ரூபா 56.6 மில்லியனான கட்டிடங்கள் முழுமையாக தேய்வுக்குட்படுத்தப்பட்டிருந்தன. அவ் வாகனங்கள் மற்றும் கட்டிடங்கள் தற்போதும் அதிகார சபையினால் பயன்படுத்தப்பட்டு வருகின்ற போதிலும் பொதுத் துறை கணக்கீட்டு நியமம் 07 இன் பிரகாரம் அச் சொத்துக்கள் தொடர்பாக நிதிக் கூற்றுக்களில் | தேவையான மீள்மதிப்பீட்டு நடவடிக்கைகள் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும். | முழுமையாக தேய்வு செய்யப்பட்ட சொத்துக்கள் இன்னுமாக பயன்படுத்தப்படு-மெனில் நியமம் பிரகாரம் மீள்மதிப்பு செய்யப்பட்டு புத்தகங்களில் உள்ளடக்கப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| தேவையான வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டிராததுடன் பொதுத் துறை கணக்கீட்டு நியமம் 03 இன் பிரகாரம் அச் சொத்துக்களின் பயன்படு ஆயுட் காலம் தொடர்பான மதிப்பிடப்பட்ட குறைப்பாடு சீர்செய்யப்பட்டு கணக்குகளில் சீராக்கப்படுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஈ) இலங்கை பொதுத் தறை கணக்கீட்டு நியமம் 07 இன் பிரகாரம் சொத்தாக இனங்காணப்பட்டு மூலதனமாக்கப்படுவதற்குள்ள, பானதுர வரையிலான கரையோர வீதி நிர்மாணிப்பற்காக ஏற்கப்பட்டிருந்த ரூபா 556.8 மில்லியான தொகை மீளாய்வாண்டின் மிகை கட்டண செலவினமாக கருதப்பட்டு வருமானத்திலிருந்து பதிவழிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ஆண்டின் இலாபம் மற்றும் நிலையான சொத்துக்கள் அப் பெறுமானத்தினால் குறைவாக கணக்கிடப்பட்டிருந்தது. | கைதவறுதலாக இந்த செயற்திட்டத்தின் கிரயம் நடைமுறையிலுள்ள வேலையாக கணக்கிடப்படவில்லை. | நடைமுறை அல்லாச் சொத்திற்காக செலவு செய்தல்கள் மூலதனமாக்கப்படல் வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டு கொள்கைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 100,000 கிலோமீட்டர் வீதி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் அதிகார சபைக்கு சொந்தமற்ற வீதி நிர்மாணிப்பிற்காக மீள்ாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரை ஏற்கப்பட்ட ரூபா 82,692 மில்லியன் நடைமுறையிலுள்ள வேலையின் கீழ் வெளிப்படுத்தப்பட்டிருந்தது. | இது தொடர்பாக தொடர்ச்சியாக ஆய்வு செய்யப்பட்டு எதிர்காலத்தில் பொருத்தமான கணக்கீட்டு முறைமையென்று அறிமுகப்படுத்தப்படும். | அதிகார சபைக்கு உரித்தல்லாத மூலதன செலவினங்கள் ஏற்கும் போது கணக்கிடும் முறை தொடர்பில் கொள்கை அடையாளப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும். |

### 1.5.3 கணக்கீட்டு குறைப்பாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) இருப்பு தொடர்பாக வெளிப்படுத்தப்படும் போது இருப்பானது, கிரயம் மற்றும் தேறிய பெறுமதி ஆகிய இரு பெறுமதிகளில் குறைந்த பெறுமதியில் கணக்கிடுவதற்கு பதிலாக 2021 திசெம்பர் 31 இல் அசையா இருப்புக்களுக்காக ரூபா 26.7 மில்லியன் ஒதுக்கம் செய்யப்பட்டிருந்தது. | கைதவறுதலாக அது தொடர்பாக நிதி அறிக்கைகளில் வெளிப்படுத்தப்பட்டிருக்க-வில்லை. | இருப்பு கணக்கிடும் கொள்கை சரியாக அடையாளப்படுத்திக் கொண்டு அதன் பிரகாரம் கணக்கிடப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) 2021 திசெம்பர் 31 இல் காகிதப் பொருட்கள் இருப்பின் பெறுமதி ரூபா 63.6 மில்லியனாக காணப்பட்டதுடன் அதனுள் உள்ளடக்கப்பட்ட காதிதப் பொருட்கள் அல்லாத உறுப்படிகளின் பெறுமதி ரூபா 5.2 மில்லியன் ஆகும். அதன் பிரகாரம், அத் திகதியில் உள்ளவாரான காகிதப் பொருட்களின் பெறுமதி அப் பெறுமதியினால் மிகையாக கணக்கிடப்பட்டிந்தது. | கைதவறுதலாக சில காகித பொருட்கள் அல்லாத உறுப்படிகளின் இருப்பு பெறுமதி காகித பொருள் இருப்பின் கீழ் காண்பிக்கப்பட்டுள்ளது. | சரியாக வகைப்படுத்தி கணிக்கப்பட்டு கணக்கிடப்படல் வேண்டும். |
| (இ) அதிகார சபைக்கு சொந்தமான A மற்றும் B தரங்களுக்குரிய பெருந்தெருக்களின் மொத்த தூர அளவு 12,225 கிலோ மீட்டர் என்றாலும், தேசிய பெருந்தெருக்கள் மூலதனமாக்கப்படல் ஆரம்பிக்கப்பட்ட 2018 ஆம் ஆண்டு தொடக்கம் 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரை 144 வீதிகளுக்குரிய 3,179 கிலோமீட்டர் மட்டுமே மூலதனமாக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம், வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு சொந்தமான A மற்றும் B தரங்களுக்குரிய 9,046 கிலோமீட்டரிலான தூரத்திற்கான பெறுமதி நிதி நிலைமைக் கூற்றில் தற்போதும் தவறப்பட்டிருப்பதுடன் இது ஒட்டுமொத்த வீதி அமைப்பின் தூர அளவில் 74 சதவீதமென அவதானிக்கப்பட்டது. | உரிய முறைமையொன்று 2022 ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைப்படுத்தப்படு-வதற்கு உள்ளது. | அதிகார சபைக்கு சொந்தமான சொத்தாகிய தேசிய நெடுஞ்சாலைகள் மூலதனமாக்கப்பட்டு பொருத்தமான வகையில் தேய்மானம் செய்யப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஈ) 2021 திசெம்பர் 31 இல் அதிகார சபையின் நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்படுகின்ற ரூபா 605,646 மில்லியனான 271 கிலோமீட்டர் அதிவேக வீதியின் கிரயம் வரிசை அமைச்சின் ஊடாக ஏற்கப்பட்டிருந்ததுடன் அம் மொத்த நிர்மாணிப்பு பெறுமதி அதிவேக வீதியாக மூலதனமாக்கப்பட்டிருந்தது. எவ்வாறெனினும் அச் சொத்துக்கள் மூலதனமாக்கப்படுவதற்கு திறைச்சேரியின் அங்கீகாரம் பெறப்படுவதற்கு தொடர்புடைய ஆவணங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | பொது முயற்சிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திடம் கோரப்பட்டுள்ளதுடன் இது வரையில் அதற்காக பதில் பெற்றுக் கொள்ளப்படவில்லை. | திறைச்சேரியுடன் இணக்கப்பாட்டுடன் மூலதனமாக்கப்படுதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (உ) அதிகார சபையின் சொத்துக்கள் பதிவேட்டில் பெறுமதியொன்று குறிப்பிடப்படாத 258 மோட்டார் வாகனங்கள் பௌதீக ரீதியாக காணப்பட்டதுடன் அம் மோட்டார் வாகனங்கள் மீள்மதிப்பிடப்பட்டு நிதிக் கூற்றுக்களில் காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் 2022 / 2023 ஆண்டுகளுக்காக வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு சொந்தமான வாகங்கள் காப்புறுதி செய்யும் போது ரூபா 492.95 மில்லியன் செலவினமொன்று ஏற்கப்பட்டு காப்புறுதி செய்யப்பட்ட 54 வாகனங்கள் தொடர்பாக சொத்துக்கள் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | இயந்திரவியல் பிரிவினால் சொத்துக்கள் பதிவேட்டிற்கு உள்ளடக்கப்பட்டு தேவையான கணக்கு சீராக்கல்களை மேற்கொள்வதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | மோட்டார் வாகனங்கள் முறையாக மீள்மதிப்பீடு செய்யப்பட்டு நிதிக் கூற்றுக்களில் காண்பிப்பதற்க்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் மற்றும் அதிகார சபைக்கு சொந்தமான வாகனங்கள் மட்டும் காப்புறுதி செய்யப்படல் வேண்டும். |
| (ஊ) வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் வீதி அபிவிருத்தி பணிகளின் போது இடம்பெயர்ந்தவர்களை மீள் குடியேற்றுவதற்காக கொள்வனவு செய்யப்பட்டு 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் பதிசெய்யப்பட்ட ரூபா 34 மில்லியன் கிரயமான 07 ஹேக்கரிலான நில அளவினை கொண்ட காணி துண்டுகள் 04 மற்றும் வெளிச் சுற்றுவட்ட அதிசேுக வீதி செயற்திட்டம் கட்டம் - II இனால் அதிகார சபைக்கு கையளிக்கப்பட்டுள்ள ரூபா 8.2 மில்லியன் பெறுமதியான காணிகள் அதிகார சபையின் சொத்துக்களாக நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | காணி துண்டுகள் தொடர்பாக தகவல்கள் கோரப்பட்டு எதிர்காலத்தில் கணக்கிடப்படும். | அதிகார சபைக்கு சொந்தமான அனைத்து சொத்துக்களும் சரியாக அடையாளப்படுத்-தப்பட்டு கணக்கிடப்படல் வேண்டும். |
| (எ) கணக்கு பிரிவினால் கணக்காய்விற்கு பெற்றுக் கொடுக்கப்பட்ட அட்டவணையின் பிரகாரம், 2021 திசெம்பர் 31 இல் காணி பிரிவினால் மற்றும் செயற்திட்டங்களினால் சுவீகரிக்கப்பட்ட காணிகளுக்காக செலுத்தப்பட வேண்டிய இழப்பீடு மற்றும் அதற்குரிய வட்டி ரூபா 585.19 மில்லியனான போதிலும், காணி பிரிவின் ஊடாக இது தொடர்பாக கணக்காய்விற்கு சமர்ப்பித்த தகவல்களின் பிரகாரம், அதற்கொத்த செலுத்தப்பட வேண்டிய இழப்பீடு மற்றும் வட்டி ரூபா 958 மில்லியனாக காணப்பட்டது. காணி | காணி இழப்பீடு மற்றும் வட்டிக்காக எழுந்த செலவினம் கணித்தலானது பிரயோக ரீதியில் தகவல்கள் கோருவதில் உள்ள சிரமங்களின் அடிப்படையில் மேற்கொள்வற்கு தவறப்பட்டிருந்தது. | காணி இழப்பீடு மற்றும் வட்டிக்காக எழுந்த செலவினத்தின் அடிப்படையில் கணிக்கப்பட்டு கணக்கு வைத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | இழப்பீடு மற்றும் வட்டி திரட்டல் செலவு அடிப்படையில் கணிக்கப்படமை இதற்கு காரணமாகியிருந்தமை அவதானிக்கப்பட்டது. எவ்வாறாயினும், இந்த மீதிகளிடையேயான காரணங்கள் ஒப்பிடப்பட்டு நிதிக் கூற்றுக்களில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஏ) | காணி சுவீகரிக்கும் சட்டதிட்டங்கள் மற்றும் பிரமாணங்கள் பிரகாரம் அதிகார சபையினால் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்துவதற்கு கடப்பாடாகவிருந்த மொத்த சட்டரீதியான இழப்பீட்டு தொகை மற்றும் அதற்குரிய வட்டித்தொகை இனங்காணப்பட்டு கணக்கிடப்பட்டிருக்கவில்லை. தெரிவு கணக்காய்வு பரிசோதனையின் பிரகாரம், 2021 திசெம்பர் 31 இல் அவ்வாறு கணக்கிடப்படாத செலுத்தப்பட வேண்டிய வட்டி ரூபா 307.07 மில்லியன் என கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | இந்த நிலை சீர்செய்வதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | செலுத்துவதற்கு கடப்பாடாகவுள்ள பெறுமதி கணக்கிடப்படல் வேண்டும். |
| (ஐ) | தெற்கு அதிவேக வீதி நீட்டிப்பு - II செயற்திட்டத்திற்குரியதாக செலுத்தப்பட வேண்டிய இழப்பீட்டுத் தொகை மற்றும் வட்டியாக 2020 ஆம் ஆண்டில் ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 135.8 மில்லியன் தொகை 2021 ஆம் ஆண்டினுள் கொடுப்பனவு செய்யும் போது மீண்டும் செலவீனமாக கணக்கிடப்பட்டமையின் காரணத்தினால் மற்றும் வீதி விரிவாக்கம் மற்றும் மேம்படுத்துவதற்குரிய செலுத்தப்பட வேண்டிய ரூபா 308.92 மில்லியான வட்டித் தொகை அதிகமாக கணக்கிடப்பட்டமையினால் மீளாய்வாண்டின் வட்டி செலவீனம் ரூபா 444.72 மில்லியன் அதிகமாக நிதிக் கூற்றுக்களில் காணப்பட்டது. | நாட்டில் நிலவும் நெருக்கடி நிலையின் அடிப்படையில் இந்த பதிவேடுகள் உரிய திகதியில் சமர்ப்பிப்பதற்கு இயலாது போனது. | கணக்கு காலப்பகுதிக்கு உரிய வருமானம் மற்றும் செலவினம் சரியாக அடையாளப்படுத்தி கணக்கிடப்படல் வேண்டும். |
| (ஒ) | வெளிநாட்டு நிதியுதவியிலான செயற்திட்டங்களிலிருந்து மற்றும் வேறு முறைகளில் அதிகார சபைக்கு பெறப்பட்டிருந்த மொத்தம் ரூபா 1,400.15 மில்லியனான தகவல் முறைமைகள் மற்றும் கிரயம் ரூபா 3,958 மில்லியனான பாலங்கள் | தகவல்கள் உரிய பிரிவுகளிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்டு எதிர்காலத்தில் கணக்கிடப்படும். | வெளிநாட்டு நிதியுதவி மற்றும் ஏனைய முறைகளிலிருந்து அதிகார சபைக்கு பெறப்படுகின்ற அனைத்து சொத்துக்களினதும் சரியான பெறுமதி கணிக்கப்பட்டு கணக்கு |

| | | |
|---|---|---|
| மற்றும் மரப்பொருட்கள் போன்ற நிலையான சொத்துக்கள் அதிகார சபையின் கணக்குகளில் உள்ளடக்கப்பட்டு நிதிக் கூற்றுக்களில் காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | வைத்தல் வேண்டும். |
| (ஓ) மீளாய்வாண்டினுள் பலவீனமான பாலங்கள் மீண்டும் நிர்மாணிப்பதற்கு ஏற்கப்பட்டிருந்த ரூபா 362.11 மில்லியன் கிரயம் மூலதனமாக்கப்படுவதற்கு பதிலாக பொதுவாக அபிவிருத்தி மற்றும் பராமரிப்பு செலவினத்தின் கீழ் நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | கிரயம் தனித்தனியோ இனங்காணப்பட்டு எதிர்காலத்தில் மூலதனமாக்கப்படுவதற்கு அல்லது செலவினமாக தள்ளுபடி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | செலவினங்கள் சரியாக வகைப்படுத்தப்பட்டு அதன் பிரகாரம் கணக்கு வைக்கப்படல் வேண்டும். |

### 1.5.4 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது பதிவேடுகள்

| விடயம் | நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் பெறுமதி (ரூபா.மி) | தொடர்புடைய பதிவேட்டின் பிரகாரம் பெறுமதி (ரூபா.மி) | வேறுபாடு (ரூபா.மி) | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| (அ) வீதி அபிவிருத்தி அதிகார சபை மற்றும் வரையறுக்கப்பட்ட மகநெகும வீதி நிர்மாணம் மற்றும் இயந்திர உபகரண (தனியார்) கம்பனிக்கிடையேயான நடைமுறைக் கணக்குகளுக்கிடை-யேயான வேறுபாடு | 13,953 | 16,221 | 2,268 | இந்த வேறுபாட்டிற்கு காரணமான விடயம் தொடர்பாக மற்றும் தகவல்கள் கோரப்படுவதற்கு குறித்த உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை பெற்றுக் கொடுக்கப்பட்டது. | குறித்த இணக்கம் கால ரீதியில் மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (ஆ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் நிறைவேற்றப்பட வேண்டிய வைப்பு மீதி மற்றும் அதில் வெளிப்படும் சொத்துக்கள் இடையேயான வேறுபாடு | 3,070.9 | 4,801.6 | 1,730.7 | உரிய ஆய்வின் பின்னர் பொருத்தமான கணக்கு கொள்கையொன்று அறிமுகப்படுத்துவதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | குறித்த இணக்கம் கால ரீதியில் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

### 1.5.5 கணக்காய்விற்கான ஆவணச் சான்றுகள் சமர்ப்பிக்கப்படாமை

| விடயம் | சமர்ப்பிக்கப்படாத கணக்காய்வு சான்று | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அதிகார சபையின் நிதிக் கூற்றுக்களில் நடைமுறை அல்லாச் சொத்துக்கள் கீழ் குறிப்பிடப்பட்டிருந்த ரூபா 529 மில்லியனான கட்டிடங்கள் மற்றும் ஏனைய சொத்துக்கள், நிலையான சொத்துக்கள் பதிவேட்டிற்கு உள்ளடக்கப்பட்டிராததுடன், அச் சொத்துக்கள் அடையாளப்படுத்திக் கொள்வதற்கு தொடர்புடைய சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | நிலையான சொத்துக்கள் பதிவேடு, சொத்துக்கள் பயன்படுத்தும் தரப்பினர் | மதிப்பீட்டு அறிக்கை பெறப்பட்டதன் பின்னர் சொத்துக்கள் பதிவேடு நாளதுவரையாக்க –ப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ள அனைத்து நடைமுறை அல்லாச் சொத்துக்களும் நிலையான சொத்துக்கள் பதிவேட்டிற்கு உள்ளடக்கப்படல் வேண்டும். |

## 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெறவேண்டிய பணம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2012/13 ஆண்டுகளில் அப்போதிருந்த பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் தெற்கு மாகாணத்தினுள் நிறைவேற்றப்பட்ட செயற்திட்டங்களுக்காக அதிகார சபைக்கு பொருளாதார அபிவிருத்தி அமைச்சு, முதலீட்டு சபையிடமிருந்து முறையே ரூபா 306 மில்லியன், ரூபா 124 மில்லியன் இன்னுமாக அறவிடப்பட்டிருக்கவில்லை. | அறவிடப்படுவதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | பெற வேண்டிய பணம் அறவிடப்படுவதற்கு தேவையான நடைமுறை தொடர்ச்சியாக நடைமுறைப்படுத்தப்பட்டு பணம் அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) 2021 திசெம்பர் 31 இல் அறவிடப்பட வேண்டிய பணி தொடக்க முற்பண மீதிகளில் 02 ஆண்டுகள் மற்றும் 05 ஆண்டுகள் இடையேயான மீதிகள் ரூபா 53.25 மில்லியனாக மற்றும் 05 ஆண்டுகளை மிகைத்த மீதி ரூபா 58.11 மில்லியனாக காணப்பட்டது. | மாகாணங்களுக்கிடையேயான வீதி அதிகார சபைக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. | பெற வேண்டிய பணம் அறவிடப்படுவதற்கு தேவையான நடைமுறை தொடர்ச்சியாக நடைமுறைப்படுத்தப்பட்டு பணம் அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

### 1.6.2 செலுத்த வேண்டிய பணம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2021 திசெம்பர் 31 இல் நிர்மாணிப்பு பிரிவினால் மகநெகும நிர்மாணிப்பு மற்றும் இயந்திர உபகரணங்கள் (தனி) கம்பனி மற்றும் மகநெகும மதியுரை மற்றும் செயற்திட்ட முகாமைத்துவ சேவைகள் தனியார் கம்பனிக்கு செலுத்தப்பட வேண்டிய பிடிப்பணத்தில் 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் தொடக்கம் தீர்க்கப்படாதுள்ள தொகை ரூபா 687.9 மில்லியனும், 4-5 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்தினுள் தீரக்கப்படாது காணப்படுகின்ற தொகை ரூபா 126.7 மில்லியனாகவும் காணப்பட்டது. | கட்டுநிதி பெற்றுக் கொள்ளப்பட்ட பின்னர் கொடுப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் எஞ்சியவை கொடுப்பனவு செய்வதற்காக வவுசர்களை சமர்ப்பிக்குமாறு மாகாணத்திற்கு பொறுப்பான பணிப்பாளர்களுக்கு தெரிவிக்கப்பட்டது. | கொடுப்பனவுகள் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) தேசிய வங்கி நிதி மற்றும் கிராமிய வீதி செயற்திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்படும் தேசிய, பிரதேச மற்றும் கிராம் என 100,000 கி.மீ மாற்று வீதிகள் புணரமைக்கும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 2021 திசெம்பர் 31 இல் ஒப்பந்த பெறுமதி ரூபா 356.44 பில்லியனான 11,595 வீதி செயற்திட்டங்களுக்காக ஒப்பந்தங்கள் வழங்கல் முடிவடைந்திருந்தது. அத்திகதியில் இந்த நிகழ்ச்சித் திட்டத்திற்காக ரூபா 92.25 பில்லியன் செலவீனமொன்று ஏற்கப்பட்டிருந்ததுடன், ரூபா 15.65 பில்லியன் பெறுமதியான உறுதிச்சீட்டுகளுக்கு இன்னுமாக செலுத்த வேண்டியிருந்தது. இந்த அறிக்கையின் திகதிக்கு தீர்க்கப்படாத உறுதிச் சீட்டுக்களின் பெறுமதி ரூபா 52.5 பில்லியனாக காணப்பட்டதுடன் அதில் ரூபா 25.49 பில்லியன் 03 மாதங்களை கடந்திருந்தது. | 100,000 செயற்திட்டத்தின் நிதி மூலமானது தேசிய வங்கிகள் மற்றும் பொது திறைச்சேரியாகும். எனவே, அம் மூலங்கள் ஊடாக நிதி செயற்திட்டத்திற்கு மாற்றப்படுதலின் பிரகாரம் செயற்திட்டத்தின் ஒப்பந்தக்காரர்களுக்கு கொடுப்பனவு செய்யப்படும். | குறித்த மீதிகள் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

### 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) 1983 இன் 12 | 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட | 30 நாட்களுக்குள் | பணிக்கொடை |

| | | | |
|---|---|---|---|
| ஆம் இலக்க பணிக்கொடை கொடுப்பனவுச் சட்டம். | சேவைக் காலத்தினை பூர்த்தி செய்து சேவையை முடிவுறுத்திய உத்தியோகத்தர்களுக்குரிய பணிக்கொடை கொடுப்பனவு அவர்கள் கடமையிலிருந்து விலகிய நாள் தொடக்கம் 30 நாட்களுக்குள் கொடுப்பனவு செய்யப்பட வேண்டிய போதிலும், 2021 ஆம் ஆண்டினுள் ஓய்வுப் பெற்ற, பதவிலகிய, மரணித்த மற்றும் பதவியை விட்டுச்சென்ற 32 உத்தியோகத்தர்களுக்காக 2021 ஆம் ஆண்டினுள் பணிக்கொடை கொடுப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை. அவ்வாறு தாமதக் காலம் அடிப்படையாக கொண்டு வட்டி தொகையும் செலுத்தப்படல் வேண்டும். | செலுத்தப்பட வேண்டுமென்று ஏற்றுக் கொள்கின்றேன். | சட்டத்தின் பிரகாரம் குறித்த கொடுப்பனவுகள் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) 2018 சனவரி 24 திகதிய 02/2018 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் 01 மற்றும் 5 ஆம் பிரிவுகள் | அதிகார சபையினால் மனிதவள அபிவிருத்தி திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கப்பட்டு மனிதவளத்தினை அபிவிருத்தி செய்யும் முறைமையொன்று அறிமுகப்படுத்தியிருக்கவில்லை. மேலும், பதவியணிக்காக வருடாந்த செயலாற்றல் ஒப்பந்தம் கைச்சாத்திடப்படுவதற்கு அல்லது செயலாற்றல் மீளாய்வு முறைமையொன்று அறிமுகப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (இ) 2006 செப்தெம்பர் 22 ஆந் திகதிய 30 ஆம் இலக்கம் மற்றும் 2009 யூன் 01 ஆந் திகதிய 30 (I) ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை: | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் நியதிகளுக்கு மற்றும் வழிக்காட்டிகளுக்கு அமைவாக தயாரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வு நடைமுறையொன்று தயாரிப்பதற்கு உட்பட்டு அத் திணைக்களத்தினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த பதவியணி மீள்கட்டமைப்பு பரிந்துரைகள் செயல்படுத்துவதற்கு பதிலாக அந் நியதிகள் கருத்திற் கொள்ளப்படாது பணிப்பாளர் சபை தீர்மானத்தின் அடிப்படையில் 23 பதவிகளுக்குரிய 287 உத்தியோகத்தர்களுக்கு | முழுமையாக ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. | சுற்றறிக்கையின் ஏற்பாடுகள் மற்றும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் ஆலோசனைகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பிழையான சம்பள அளவின் பிரகாரம் சம்பளங்கள் தயாரிக்கப்பட்டு அதன் பிரகாரம் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | | |
| (ஈ) 2006 இன் தேசிய பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 4.2.1 (அ), (ஆ) மற்றும் (உ) பிரிவுகள் மற்றும் 4.2.2 (அ) பிரிவு | ஆகக்குறைந்தது 03 வருட காலத்திற்காக பிரதான பெறுகை திட்டமொன்று தயாரிக்கப்பட்டு 06 மாதங்களுக்கு மேற்படாத காலத்திற்காக பெறுகை கால அட்டவணை தயாரிக்கப்பட வேண்டிய போதிலும், அதன் பிரகாரம் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | இது தயாரிக்கப்பட்டு தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. | தேசிய பெறுகைகள் வழிக்காட்டி கோவையின் ஏற்பாடுகளுக்கு ஏற்ப நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (உ) 2006 தேசிய பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 8.10.1 ஆம் பிரிவு மற்றும் 8.11.4 (அ)(i) ஆம் பிரிவு | கையளிக்கப்பட்ட ஒப்பந்தங்கள் தொடர்பான தகவல்கள் அதிகார சபையின் இணையத் தளத்தில் அல்லது ஏனைய பொருத்தமான ஊடகத்திலோ பகிரங்கப்படுத்தப்படா-திருந்ததுடன் ஒப்பந்தத்தை புறக்கணிக்கும் வழங்குனர்கள் தொடர்பான தரவு மூலமோன்று பேணப்பட்டிருக்கவில்லை. | அதிகார சபையின் வலைத்தளத்தில் பிரசுரித்தல் ஆரம்பிக்கப்பட்-டுள்ளது. | ஒப்பந்தங்கள் மற்றும் வழங்குனர்கள் தொடர்பான தரவுகள் தொடர்பாக தேசிய பெறுகைகள் வழிக்காட்டி கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஊ) வீதி அபிவிருத்தி அதிகார சபை பணிப்பாளர் நாயகத்தின் RDA/GM/10/169 ஆம் இலக்கம் மற்றும் 2010 யூன் 10 திகதிய சுற்றறிக்கை | போக்குவரத்து வசதிகள் வழங்கும் போது ஒப்பந்தத்திற்கு நேரடியாக தொடர்புப்படுகின்ற பொறியியலாளருக்கு போக்குவரத்து வசதி பெற்றுக் கொடுப்பதற்கு மட்டும் அங்கீகாரம் பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்த போதிலும், அதற்கு அமையாத வண்ணம் ஒப்பந்தத்திற்காக நேரடி தொடர்பற்ற வீதி அபிவிருத்தி அதிகார சபையின் தெற்கு மாகாண அலுவலகங்களின் பொறியியலாளர்கள் மற்றும் தொழிநுட்ப உத்தியோகத்தர்களுக்காக போக்குவரத்து வசதிகள் வழங்குவதற்கு வேன் வாகனங்கள், கெப் வாகனங்கள் மற்றும் கார்கள் வாடகைக்கு பெற்றுக் கொள்ளப்பட்டிருந்ததுடன், | 100,000 கி.மீ செயற்திட்டத்திற்காக பொறியியலாளர்களை போன்று, தொழிநுட்ப/ தொழிற்துறை உத்தியோகத்தர்களினதும் நேரடி சேவை தேவையொன்று காணப்பட்டமை-யினால் மற்றும் ஒரு தடவையில் பாரியளவு செயற்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப் படுகின்றமையினால் மற்றும் கொவிட் தொற்று நிலையில் காணப்பட்ட காலப்பகுதியினுள் ஊழியர்களுக்கு | சுற்றறிக்கையின் ஏற்பாடுகள் பிரகாரம் ஒப்பந்தக்காரருக்கு நேரடியே தொடர்புடைய பொறியியலாளருக்கு மட்டும் போக்குவரத்து வசதிகள் வழங்கப்படல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | அதற்காக கூட்டுத்தொகை ரூபா 23.3 மில்லியன் வாடகை செலுத்தப்பட்டிருந்தது. | போக்குவரத்து வசதிகள் வழங்குவதல் பெறுகைகள் குழுவின் தீர்மானத்தின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்டது. | |
| (எ) | 2008 இன் 40 ஆம் இலக்க தேசிய வீதிகள் சட்டத்தின் 4(3), 6(1) மற்றும் 7(1) பிரிவுகள் | பிரிவின் பிரகாரம் முறையே, ''ஒருங்கிணைக்கப்பட்ட வீதி முறைமைகள் அபிவிருத்தி மற்றும் பராமரிப்பிற்கான செயல்நடவடிக்கை திட்டமொன்று'' தயாரிக்கப்பட்டிராததுடன் ''வீதி முறைமை அபிவிருத்தி ஆலோசனை சபை'' மற்றும் ''மாவட்ட வீதி முறைமை அபிவிருத்தி இணைப்புக் குழு'' தாபிக்கப்பட்டிருக்கவில்லை. | வரிசை அமைச்சு ஊடாக இது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | சட்டத்தின் உரிய ஏற்பாடுகளுக்கு அமைவாக நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஏ) | 2008 இன் 40 ஆம் இலக்க தேசிய வீதிகள் சட்டத்தின் 13 மற்றும் 14 ஆம் பிரிவுகள் மற்றும் 2011 நவம்பர் 18 ஆந் திகதிய 1732/12 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி பத்திரத்தின் 07 ஆம் பந்தி | கட்டணங்கள் அறவிடப்படுகின்ற தேசிய நெடுஞ்சாலைகளிலிருந்து பெறப்படுகின்ற பணம் அதிகாரசபையின் நிதியத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டும், எவ்வாறெனினும், 2021 திசெம்பர் 31 இல் அதிவேக வீதிகளில் சேகரிக்கப்பட்ட ரூபா 61,435 மில்லியன் வருமானத்தில், அதிகார சபையின் அனைத்து வருமானங்களும் மூலங்கள் அடிப்படையில் வரி செலுத்துவதற்காக ஏற்கப்பட்டிருந்த செலவினம் ரூபா 18,473 மில்லியனாக காணப்பட்டது. மேலும் வர்த்தமானி பத்திரிக்கை நியமங்களுக்கு முரணாக அதிகார சபையின் ஊழியர்களுக்காக சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளாக ரூபா 10,713 மில்லியனும், பொது செலவினம் மற்றும் செயற்திட்டங்களுக்கான கொடுப்பனவிற்காக ரூபா 3,402.3 மில்லியனும் பொலிஸ் திணைக்களத்தின் உத்தியோகத்தர்களுக்கு வசதியளிப்பதற்கான ரூபா 650 மில்லியனுக்கு மேற்பட்ட தொகையும் செலவிடப்பட்டிருந்தது. | அதிவேக வீதிகளிலிருந்து பெறப்படுகின்ற வருமானம் பொது திறைச்சேரியின் அங்கீகாரத்துடன் சம்பளம் செலுத்தும் போது ஏற்படும் நிதி பற்றாக்குறைக்காக பயன்படுத்தப்படு-கின்றது. | சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவு

மீளாய்வாண்டின் ஒட்டுமொத்த செயற்பாட்டு விளைவு ரூபா 86,181.42 மில்லியன் மிகையாக காணப்பட்டதுடன் அதற்கே நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 183,437.38 மில்லியனாக காணப்பட்டது. அதன் பிரகாரம் நிதி விளைவில் ரூபா 97,255.96 மில்லியன் வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. இவ் வீழ்ச்சிக்கு செயற்திட்ட பணிகள் நிறைவுசெய்யப்பட்டதன் பின்னர் அச் செயற்திட்டங்களின் சொத்துக்கள் மூலதனமாக்கப்படுவதற்குரிய மூலதன அளிப்பு கடந்த ஆண்டிற்கு இணையாக ரூபா 140,604 மில்லியனால் குறைந்தமை பிரதானமாக தாக்கமளித்திருந்தது. எவ்வாறெனினும் பராமரிப்பு மற்றும் மேம்படுத்தலுக்கு வரிசை மற்றும் இராஜாங்க அமைச்சின் ஊடாக பெறப்பட்ட வழங்கல் கடந்த ஆண்டிற்கு இணையாக ரூபா 39,221 மில்லியனால் அதிகரித்திருந்தது. மேலும் 100,000 கி.மீ வீதி நிகழ்ச்சித் திட்டத்திற்குரியதாக அதிகார சபைக்கு சொந்தமற்ற வீதீ நிர்மாணிப்புக்கள் நிறைவு செய்யப்பட்டு கணக்குகளிலிருந்து பதிவழிக்கப்பட்டமையினால் அபிவிருத்தி மற்றும் பராமரிப்பு செலினம் ரூபா 2,912 மில்லியனினால் அதிகரித்தமையானது நிதி விளைவு குறைந்தமைக்கு காரணமாகியிருந்தன.

## 2.2 பிரதான வருமானம் மற்றும் செலவின விடங்களின் போக்கு பகுப்பாய்வு

| உறுப்படி | 2020 | 2021 | வேறுபாடு | நேரொத்த ஆண்டிற்கு இணையாக சதவீத வேறுபாடு |
|---|---|---|---|---|
| **மீண்டெழும் அளிப்பு** | 36,482 | 83,848 | 47,366 | 130 |
| **மூலதன அளிப்பு** | 222,876 | 82,272 | -140,604 | (63) |
| **அதிவேக வீதி வருமானம்** | 3,760 | 4,530 | 770 | 20 |
| **அபிவிருத்தி மற்றும் பராமரிப்பு செலவினம்** | 10,110.48 | 12,681.15 | 2,570.67 | 25 |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**i.** பராமரிப்பு மற்றும் மேம்படுத்தலுக்காக வரிசை மற்றும் இராஜாங்க அமைச்சின் ஊடாக பெறப்பட்ட அளிப்பு முன்னைய ஆண்டிற்கு இணையாக ரூபா 39,221 மில்லியனினால் அதிகரித்திருந்தமை மீண்டெழும் அளிப்பு 130 சதவீத்தினால் அதிகரித்தகைக்கு பிரதான காரணமாகியிருந்தது.

**ii.** செயற்திட்ட வேலைகள் நிறை செய்யப்பட்ட பின்னர் அச் செயற்திட்டங்களின் சொத்துக்கள் மூலதமாக்கப்படுவதற்கு பெறப்பட்ட மூலதன அளிப்பு முன்னைய ஆண்டிற்கு இணையாக ரூபா 140,604 மில்லியனினால் குறைந்தமை மூலதன அளிப்பு 63 சதவீத்தினால் குறைந்தமைக்கு காரணமாகியிருந்தது.

**iii.** கொவிட் 19 தொற்று நிலையின் காரணத்தினால் 2020 ஆம் ஆண்டில் நிலவிய கடுமையான பயண தடைகள் குறைந்தமையின் காரணத்தினால் அதிவேக வீதி பயன்பாடு ஒப்பிட்டளவில் அதிகரித்தமையானது அதிவேக வீதி வருமானம் 20 சதவீதத்தினால் அதிகரித்தமைக்கு காரணமாகியிருந்தது.

**iv.** 100,000 கி.மீ வீதி நிகழ்ச்சித் திட்டத்திற்குரிய அதிகார சபைக்கு சொந்தமற்ற வீதி நிர்மாணிப்புக்கள் நிறைவு செய்யப்பட்டு கணக்குகளிலிருந்து பதிவழிக்கப்பட்டமையினால் அபிவிருத்தி மற்றும் பராமரிப்பு செலவினங்கள் 2,912 மில்லியனினால் அதிகரித்தமை மற்றும் அபிவிருத்தி மற்றும் பராமரிப்பு செலவினங்கள் 25 சதவீதத்தினால் அதிகரித்தமைக்கு பிரதான காரணமாகியிருந்தது.

## 2.3 விகிதசாரப் பகுப்பாய்வு

| விகிதம் | 2021 திசெம்பர் 31 இல் | 2020 திசெம்பர் 31 இல் | கடந்த ஆண்டிற்கு இணையாக வேறுபாடு நன்மையானதா நன்மையற்றதா என |
|---|---|---|---|
| நடைமுறை விகிதம் | 1.41 | 1.20 | நன்மையானது |
| விரைவு விகிதம் | 1.38 | 1.18 | நன்மையானது |
| தேறிய இலாப விகிதம் | 49 | 68 | நன்மையற்றது |
| கடன் செலுத்தும் விகிதம் | 0.47 | 0.42 | நன்மையற்றது |
| மொத்த கடன் - மொத்த சொத்து விகிதம் (நூற்றுக்கு) | 30.81 | 28.72 | நன்மையற்றது |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

i. மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நடைமுறை விகிதம் மற்றும் விரைவு விகிதம் ஏற்றுக்கொள்ளப்பட்ட குறைந்த மட்டத்தில் காணப்பட்டதுடன் கடந்த ஆண்டுடன் ஒப்பிடும் போது அதன் விகிதங்களில் நேர்மறையான அதிகரிப்பு வெளிப்படுத்தப்பட்டது.

ii. கடந்த ஆண்டிற்கு இணையாக மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நீண்ட கால கடன் 24 சதவீதத்தினால் அதிகரிக்கும் போது அத் திகதியில் உள்ளவாறு அதிகார சபையின் வெகுசன விகிதம் 12 சதவீதத்தினால் அதிகரித்தயையானது தேர்வு விகிதங்கள் கடந்த ஆண்டிற்கு இணையாக நன்மையற்றதாகியமை குறித்து தாக்கமளித்திருந்தது.

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் தீர்க்கப்பட்டிராத ஒட்டுமொத்த கடன் மீதி ரூபா 359,479 மில்லியனாக காணப்பட்டதுடன் அது ரூபா 268,313 மில்லியனான வங்கி கடன்களில் மற்றும் ரூபா 91,166 மில்லியன் கடன் பத்திரங்களைக் கொண்டதாகும். 100,000 கிலோ மீட்டர் வீதி செயற்திட்டம், மத்திய அதிவேக வீதிகள் நிர்மாணிப்பு, பெருந்தெருக்கள் விரிவாக்கல் மற்றும் மேம்படுத்தல் மற்றும் அதிகார சபையின் செயல்மூலதன தேவைப்பாட்டிற்கு பதிலாக இந்த கடன் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்ததுடன் கடனுக்காக வட்டி எடையிடப்பட்ட முதன்மை கடன் விகிதத்திற்கு அதிகபட்சம் 2 தொடக்கம் 2.8 சதவீதம் ஆன வீச்சில் பெறுமதியொன்று சேர்க்கப்பட்டு வட்டி நிர்ணயிக்கப்பட்டிருந்தது. இந்த அனைத்து கடன்களும் பெற்றுக் கொள்ளும் போது திறைச்சேரி பிணைமுறியினை வழங்கியிருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 இனங்காணப்பட்ட நட்டங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு சொந்தமான வீதி அபிவிருத்தியின் போது அந் நிறுவனங்களால் இடமளிக்கப்படாத செலவினங்கள் உள்ளடக்கப்படுதல், அசாதாரணமான அளவில் கழிவுகள் உள்ளடக்கப்படல், தெரிவு செய்யப்பட்டிருந்த விலை வீதங்களில் துல்லியமின்மை, தேவைப்பாடு இனங்காணப்படாது செலவினங்கள் மதிப்பிடல் மற்றும் தேவைப்பாடு பூர்த்தி செய்ய உகந்த முறையைத் தெரிவு செய்யாமை போன்ற காணங்களினால் மாத்தறை, பொலொன்னறுவை, கண்டி மற்றும் நுரவஎலிய மாவட்டங்களுக்குரிய சில வீதிகளின் மதிப்பீடு ரூபா 326.2 மில்லியனினால் மிகையாக கணிக்கப்பட்டிருந்தது. இவ்வாறு பிழையான மதிப்பீட்டின் அடிப்படையில் ஒப்பந்தக்காரர்களுக்கு கொடுப்பனவு செய்யப்பட்டமையினால் ரூபா 61 மில்லியன் மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்த சில சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. அவ்வாறே, மதிப்பீட்டில் குறிப்பிடப்பட்டுள்ள வேலை விடயங்கள் உரிய முறையில் நிறைவேற்றப்படாமை மற்றும் உரிய நியமம் இன்றி ABC மற்றும் அஸ்போல்ட் | இந்த பரிசோதனை நடத்தப்பட்ட செயற்திட்டங்களுக்குரிய இறுதி கொடுப்பனவுகள் இது வரையில் மேற்கொள்ளப்பட்டிராததுடன் ஒரே தடவையில் கொடுப்பனவு செய்தல் ஒப்பந்த முறைமையினுள் கொடுப்பனவு செய்வதற்கு முன்னர் மதிப்பீடு திருத்தப்படல் வேண்டும். தற்போது அம் மதிப்பீடுகள் திருத்தப்படல் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | மதிப்பீடு தயாரித்தலானது மிகவும் சரியாகவும் முறையான மேற்பார்வையுடனும் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | இடல் போன்ற நிலைகள் காணப்படுகையில் மாத்தறை மாவட்டத்தினுள் செயல்படுத்தப்படுகின்ற சில செயற்திட்டங்களுக்காக ஒப்பந்தக்காரர்களுக்கு ரூபா 14.2 மில்லியன் மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது. | | |
| (ஆ) | கொழும்பு கட்டுநாயக அதிவேக வீதியின் இலெக்ரொனிக் கட்டணம் அறவிடுவதற்காக 2014 திசெம்பர் 18 ஆந் திகதி வீதி அபிவிருத்தி அதிகார சபை மற்றும் இலங்கை வங்கியுடன் உடன்பட்ட ஒப்பந்தத்தில் ஒப்பந்தக் காலம் 2020 யூன் 08 ஆந் திகதி முடிவடைந்திருந்த போதிலும், புதிய ஒப்பந்தமொன்றில் உடன்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே, இந்த அதிவேக வீதியில் இலக்ரொனிக் கட்டணம் செலுத்தும் முறை பயன்படுத்துபவர்களை ஊக்குவிப்பதற்கு அறவிடப்படுகினற கட்டணங்களில் 10 சதவீத கழிவொன்று இலெக்ரொனிக் கட்டணம் செலுத்தும் முறைமைக்கு மாற்றப்படும் முதல் 06 மாதக் காலம் வரை மட்டும் பயன்படுத்துவோருக்கு பெற்றுக் கொடுப்பதற்கு அங்கீகாரம் பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்தது. 06 மாதங்கள் கடந்த பின்னரும் இந்த 10 சதவீது கழிவு பெற்றுக் கொடுத்த காரணத்தினால் 2021 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் முறையே ரூபா 29 மில்லியன் மற்றும் ரூபா 27 மில்லியன் என மொத்தம் ரூபா 56 மில்லியன் அதிகார சபையினால் இழக்கப்பட்டிருந்தது. மேலும், நாளாந்தம் சேர்க்கப்படுகின்ற இலக்ரொனிக் கட்டணம் அதிகார சபையின் வருமானம் சேகரிக்கும் கணக்கிற்கு மாற்றப்படும் காலத்திலும் தாமதமொன்று காணப்பட்டது. | சிக்கல்கள் சீர்செய்வதற்கு தொழிநுட்ப குழுவானது எப்போதும் உயர்ந்தபட்ச முயற்சியினை ஏற்கின்றது. | முறையான மற்றும் நாளதுவரையாக்கப் பட்ட முறைமையின் பிரகாரம் கட்டணங்கள் அறவிடப்படல் வேண்டும். |
| (இ) | தேசிய வங்கி நிதி மற்றும் கிராமிய வீதி செயற்திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்படும் தேசிய, பிரதேச மற்றும் கிராம் என 100,000 கி.மீ மாற்று வீதிகள் புணரமைக்கும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் தயாரிக்கப்பட்ட பொறியியல் மதிப்பீடு திருத்தல் மற்றும் சீர்செய்தல் மேற்கொள்ளுமாறு அனைத்து மாகாண பணிப்பாளர்களும், பிரதான பொறியியலாளர்கள் மற்றும் நிறைவேற்று பொறியிலாளருக்கு குறித்த செயற்திட்ட பணிப்பாளரினால் தெரிவிக்கப்பட்டிருந்த போதிலும், 2022 ஒக்தோபர் 30 ஆம் திகதி வரையிலும் மொத்தம் ரூபா 15,690.5 | செயற்திட்டத்தின் கொடுப்பனவு பரிந்துரை செய்தல் உடன்பட்ட ஒப்பந்த தொகை செயற்திட்டத்தின் செயன் முன்னேற்றத்துடன் கணிக்கப்படும் மைல்கற்களின் சதவீதமாக பரிந்துரை செய்யப்படுகின்றது. இந்த நடைமுறையிலுள்ள செயற்திட்டங்களுக்காக மேற்கொள்ளப்படுகின்ற கொடுப்பனவு திருத்தங்கள், நெடுஞ்சாலைகள் அமைச்சில் | மதிப்பீடு தயாரித்தலானது முறையாக, பொருளாதார ரீதியில் பயனுள்ளதாக மற்றும் பொறுப்புடையதாக மேற்கொள்ளப்பட வேண்டியதுடன் அது தொடர்பாக மேற்பார்வையும் செய்யப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| மில்லியன் பெறுமதியான 146 செயற்திட்டங்கள் தொடர்பாக சீர்செய்தல்கள் மேற்கொள்ளப்பட்டிராததுடன் அதன் பிரகாரம் எதிர்காலத்தில் ஒப்பந்தக்காரர்களுக்கு அங்கீகரிக்கப்பட்ட விலை வீதங்களில் கொடுப்பனவு செய்வதில் அரசிற்கு பாரிய நிதி நட்டமொன்று ஏற்படுவதற்கு சந்தர்ப்பம் காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது. | கணக்காய்வு பிரிவுடன் மேற்கொள்ளப்பட்ட கலந்துரையாடலின் போது ஏற்படுத்திக் கொண்ட இணக்கத்தின் அடிப்படையில் மெற்ப முறைமையினுள் இறுதி கொடுப்பனவிற்கு முன்னர் மேற்கொள்ளப்படும். | |

### 3.2 முகாமைத்துவ செயற்றிறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) அதிகார சபைக்கு சொந்தமான துணைக் கம்பனிகளில் அதிவேக வீதி போக்குவரத்து கம்பனி 2016 தொடக்கம் நிதிக் கூற்றுக்களை கணக்காய்விற்கு சமர்ப்பித்திருக்கவில்லை. | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. | நிதிக் கூற்றுக்கள் உரிய காலப்பகுதியினுள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (ஆ) அதிகார சபைக்கு சொந்தமான துணைக் கம்பனிகளில் மகநெகும நிர்மாணிப்பு மற்றும் இயந்திர உபகரண கம்பனியின் நிதிக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அபிப்பிராயம் 2017 ஆம் ஆண்டு தொடக்கம் பாதகமாக காணப்பட்டு வருகின்றதுடன், மகநெகும மதியுரை மற்றும் செயற்திட்ட முகாமைத்துவ சேவை கம்பனியின் கணக்காய்வு அபிப்பிராயமும் 2019 ஆம் ஆண்டு தொடக்கம் பாதகமாகவுள்ளது | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. | துணை கம்பனிகளின் நடவடிக்கைகள் முறையே மேற்பார்வை செய்யப்படல் வேண்டும். |
| (இ) 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 133 பிரிவின் பிரகாரம், கம்பனியொன்றினால் ஆண்டுக்கு ஒரு முறை பங்குதாரர்களின் வருடாந்த கூட்டம் நடத்தப்பட வேண்டிய போதிலும், அதிகார சபைக்கு சொந்தமான அனைத்து கம்பனிகளும் அதற்கு அமைவாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இது தொடர்பாக குறித்த கம்பனிகளுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. | துணை கம்பனிகளின் நடவடிக்கைகள் முறையே மேற்பார்வை செய்யப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஈ) 2021 திசெம்பர் 31 இல் காரணம் முன்வைக்கப்படாது ரூபா 3,360.9 மில்லியன் நிறுத்தி வைக்கப்பட்டிருந்ததுடன் ரூபா 99.4 மில்லியன் ஒப்பந்தக்காரர்களினால் கோரப்படாமையினால் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. வீதிகளின் நிர்மாணிப்பு தரம் தொடர்பாக மீண்டும் மீளாய்வு செய்யப்பட்டு முறையான நடைமுறை பின்பற்றப்பட்டு இந்த மீதி வருமானத்திற்கு எடுப்பதற்கு செயற்பட வேண்டிய போதிலும் 2021 திசெம்பர் 31 இல் செலுத்தப்பட வேண்டிய பிடிப்பணத்தில் பதிவழிப்பதற்கு முன்மொழியப்பட்ட பெறுமதி ரூபா 81.8 மில்லியன் ஆக காணப்பட்டது | குறித்த ஒப்பந்தக்காரர்களுக்கு தெரிவிக்கப்படுத்தி குறித்த பிடிப்பணத்தினை விடுவிப்பதற்கு அல்லது குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் வருமானத்திற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | வருமானத்திற்கு எடுக்கக்கூடிய அனைத்து பிடிப்பணங்களும் வருமானத்திற்கு எடுப்பதற்கும் கோரப்படாத தொகைகளுக்குரிய நிர்மாணிப்பு தரம் மீள மீளாய்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (உ) 2021 திசெம்பர் 31 இல் செலுத்தப்பட வேண்டிய பிடிப்பணத்தில் நிர்மாணிப்பு பிரிவு, மாகாண பணிப்பாளர் அலுவலகம் மற்றும் கொடுப்பனவு பிரிவிற்கு தொடர்புடையதாக மேற்கொள்ளப்பட்ட தெரிவு கணக்காய்வு பரிசோதனையின் போது 04 ஒப்பந்த கம்பனிகளுக்கு தொடர்புடையதாக குறைப்பாடுகளுக்கான உத்தரவுக் காலமும் கடந்திருந்த போதிலும் செலுத்தப்பட வேண்டிய பிடிப்பணம் ரூபா 95 மில்லியன் ஆகும். இது தொடர்பாக முறையான புலனாய்வுகள் மேற்கொண்டு பின்னர் வருமானத்திற்கு சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | குறித்த ஒப்பந்தக்காரர்களுக்கும் தெரிவித்து பிடிப்பணத்தினை விடுவிப்பதற்கு அல்லது குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் வருமானத்திற்கு செலவு வைப்பதற்கு தேவையான பரிந்துரை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | இது தொடர்பாக உரிய புலனாய்வொன்று மேற்கொண்டு வருமானத்திற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஊ) 2021 திசெம்பர் 31 இல் செய்யப்பட்ட வேலை பெறுமதி ரூபா 1,142.81 மில்லியனுக்காக ஒப்பந்தக்காரர்களுக்கு ரூபா 1,217.19 மில்லியன் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தமையினால் செய்யப்பட்ட வேலையை மிகைத்து ரூபா 167.92 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. எந்தவொரு செயன்முன்னேற்றமும் இல்லாத செயற்திட்டங்களுக்காக வழங்கப்பட்டிருந்த பணி தொடக்க முற்பணமும் இதில் அடங்குகின்றது. | செயற்திட்டங்களின் வேலை பெறுமதியினை மிகைத்து கொடுப்பனவு செய்யப்பட்டுள்ள தொகையாக குறிப்பிடப்பட்டிருந்தது, முழுமையாக முற்பணம் மீண்டும் அறவிடப்பட்டிராத சந்தர்ப்பத்திலாகும். | எந்தவொரு செயன் முன்னேற்றமும் அற்ற செயற்திட்டங்களுக்காக விடுவிக்கப்பட்டிருந்த பணி ஆரம்ப முற்பணம் செயலாற்றல் பிணைமுறி ஊடாக மீண்டும் அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 3.3 செயற்பாட்டு செயற்றிறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| தேசிய வங்கி நிதி மற்றும் கிராமிய வீதி செயற்திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்படும் தேசிய, பிரதேச மற்றும் கிராம் என 100,000 கி.மீ மாற்று வீதிகள் புணரமைக்கும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ வீதி அபிவிருத்தியின் போது பெருந்தெருக்கள் அட்டவணைகள் (HSR) மற்றும் விவரக்குறிப்புக்கள் பயன்படுத்தப்பட்டிருந்தமை பொருளாதார மற்றும் பயனுள்ளதாக இல்லாமையினால் கிராமிய வீதிகளுக்காக விவரக்குறிப்புக்கள் தயாரித்து பின்பற்ற வேண்டியிருந்தது. | அனைத்து வீதிகளுக்கான வீதி அமைக்கும் முறைமைகள் சமமானவை என்பதனால், பொதுவாக செயற்திட்ட விபரக் குறிப்புக்கள் பயன்படுத்தல் பொருந்த்கூடியதாகும். | பொருளாதார ரீதியில் மிகவும் பயனுறுதிமிக்கது என்பதனால் கிராம வீதிகளுக்காக பொருத்தமன தனி விபரக்குறிப்பொன்று தயாரிக்கப்படல் வேண்டும். |

## 3.4 சர்ச்சை தன்மையிலான கொடுக்கல்வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) மகநெகும இமல்ஷன் கம்பனியின் 99 சதவீத நேரடி கட்டுப்பாட்டு உரித்து அதிகார சபைக்கு காணப்படுகின்றதென நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருப்பினும், அதற்கான பங்குச் சான்றிதழ்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. இந்த கம்பனியின் ரூபா 1,000,100 ஆன பங்குகள் அதிகார சபை கொள்வனவு செய்துள்ளமை அதிகார சபையின் நிதிக் கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், அதற்கு நேரொத்த கம்பனியின் நிதிக் கூற்றுக்களில் அதிகார சபைக்கு சொந்தமான பங்குகளின் பெறுமதி ரூபா 100 மட்டுமென குறிப்பிடப்பட்டு ரூபா 01 மில்லியனான தொகை அதிகார சபையினால் கம்பனிக்கு பெற்றுக் கொடுக்கப்பட்ட கடனாக சர்ச்சை தன்மையாக துணைக் கம்பனியின் நிதிக் கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டிருந்தது. எவ்வாறெனினும், இந்த பங்குரிமை தொடர்பான சர்சையான நிலை தீர்க்கப்படுவதற்கு அதிகார சபையினால் இந்த அறிக்கையின் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் பங்கு சான்றிதழ்கள் பல தடவைகளில் கோரப்பட்டிருந்த போதிலும் இதுவரையில் அச் சான்றிதழ்கள் அதிகார சபைக்கு பெறப்பட்டிருக்கவில்லை. | இந்த பங்கு உரித்து தொடர்பான இணக்கமின்மை விரைவில் தீர்க்கப்பட வேண்டியதுடன், நிலவுகின்ற சரிளான நிலை அதிகார சபையின் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 3.5 செயற்திட்டங்கள் அல்லது மூலதன வேலைகளிலுள்ள தாமதங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) வீதி அபிவிருத்தி அதிகார சபையின் நிர்மாணிப்பு பிரிவினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் 2018 ஆம் ஆண்டு தொடக்கம் 2021 திசெம்பர் 31 வரை வீதிகளை விரிவாக்கல் மற்றும் மேம்படுத்தலின் கீழ் ரூபா 36,349 மில்லியனான மதிப்பிடப்பட்ட பெறுமதியையுடைய ஒப்பந்த வேலைகள் 239 செயல்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. இதில் 24 ஒப்பந்தங்கள் மட்டும் 2021 திசெம்பர் 31 இல் நிர்மாணிப்பு பணிகளை நிறைவு செய்திருந்ததுடன் அது மொத்த ஒப்பந்த அளவில் 10 சதவீதம் ஆகும். மேலும் 38 ஒப்பந்தங்கள் நடைமுறையிலுள்ள நிலையில் காணப்பட்டதுடன் ஒரு ஒப்பந்தம் நிதி இல்லாமையினால் இடைநடுவே நிறுத்தப்பட்டிருந்தது. மேலும் 32 ஒப்பந்தங்கள் நிதியேற்பாடு இல்லாமையினால் வழங்கப்பட்டிருக்கவில்லை. | 2022-05-31 இல் உள்ளவாறு செயற்திட்டங்களின் செயன் முன்னேற்றமாகும். | திட்டமிடப்பட்ட ஒப்பந்தங்கள் எதிர்பார்க்கப்பட்டு காலப்பகுதியினுள் நிறைவு செய்வதற்கு உயர்நதபட்ச நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) 2021 திசெம்பர் 31 இல் 26 ஒப்பந்தங்களின் பணி நிறைவடைதலின் இலக்கிடப்பட்ட திகதிகள் கடந்திருந்ததுடன் அவ் ஒப்பந்தங்களின் பணி தொடக்க முற்பண உத்தரவாதங்களின் செல்லுப்படியாகும் காலமும் கடந்திருந்தது. 2021 திசெம்பர் 31 இல் அவ் ஒப்பந்தங்களில் இன்னுமாக அறவிடப்பட வேண்டியிருந்த முற்பண மீதி ரூபா 11.93 மில்லியனாக காணப்பட்டது. மேற்படி ஒப்பந்தங்களுக்கு தொடர்புடைய முற்பண உத்தரவாதங்களின் செல்லுபடியாகும் காலம் நீட்டிப்பதற்கு அல்லது இறுதியாக முற்பண உத்தரவாதங்கள் காசாக்கிக் கொள்வதற்கு முகாமைத்துவம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை | இது தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் நிகழ்கால நிலை குறிப்பிடப்பட்டுள்ளது. | திட்டமிடப்பட்ட ஒப்பந்தங்கள் எதிர்பார்க்கப்பட்ட காலப் பகுதியினுள் நிறைவு செய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டியதுடன், அவ்வாறு இல்லையெனில் முற்பண உத்தரவாதங்களின் காலம் நீட்டிப்பதற்கு நடவடிககை எடுக்கப்படல் வேண்டும். இலக்கமிடப்பட்ட நாட்களில் பணிகள் நிறைவு செய்யப்படவில்லை எனில் முற்பண உத்தரவாதம் கால ரீதியில் அறவிடப்பட்டு நட்டம் குறைத்துக் கொள்ளுதல் வேண்டும். |

### 3.6 பெறுகைகள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பெறுகைகள் செயலாற்றல் கோவையின் பிரகாரம் விலைமனு கோரல் பதிவேட்டில் நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டிராத உப ஒப்பந்தங்களுக்காக வசதியளித்தல் சட்டரீதியற்றதெனிலும், ரூபா 165.9 மில்லியன் பெறுமதியின் அடிப்படையில் உடன்பட்டிருந்த பெலொன்னறுவை மாவட்டத்தினுள் செயற்படுத்தப்பட்ட செயற்திட்டமொன்று வேறு தனியார் கம்பனியொன்றிற்கு உப ஒப்பந்தமாக வழங்கப்பட்டிருந்தது. | சேவை வழங்குனர்களின் பங்களிப்புடன் அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். | அரச பெறுகை வழிக்காட்டி கோவையின் வழிக்காட்டிகள் பின்பற்றப்படல் வேண்டும். |

### 3.7 ஒப்பந்த நிர்வாகத்திலுள்ள குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 100,000 கி.மீ மாற்று பாதைகள் மறுசீரமைப்பு வேலைத்திட்டத்தின் கீழ் செயலாற்றலொன்று இன்றி 11 ஒப்பந்தக்காரர்களினால் கைவிடப்பட்டிருந்த செயற்திட்டங்கள் 18 ஆக காணப்பட்டதுடன் அதன் ஒப்பந்த பெறுமதி ரூபா 593.88 மில்லியன் ஆகும். அவ் ஒப்பந்தக்காரர்களுக்கு வழங்கப்பட்ட ஒப்பந்தங்களில் ஒப்பந்த பெறுமதி ரூபா 147.45 மில்லியனான 04 ஒப்பந்தங்கள் ஒப்பந்தக்காரர்களினால் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. எதிர்பார்க்கப்பட்ட செயலாற்றல் காண்பிக்காத ஒப்பந்தக்காரர்களை தவறிழைத்தோர் பட்டியலில் பதிவதற்காக தேவைப்படுகின்ற சட்டரீதியான கட்டமைப்பு தயாரிப்பதற்கு முகாமைத்துவத்தின் கவனம் இதுவரையில் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | ஒப்பந்தத்தின் பிரகாரம் செயற்படாத ஒப்பந்தக்காரர்களுக்காக பின்னர் ஒப்பந்தம் வழங்காதிருக்க பார்த்துக் கொள்ளப்பட்டதுடன் அவ்வாறான ஒப்பந்தக்காரர்களின் தவறிழைத்தோர் பட்டியலொன்று தயாரிக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | எதிர்பார்க்கப்பட்ட செயலாற்றல் காண்பிக்காத ஒப்பந்தக்காரர்களினை தவறிழைத்தோர் பட்டியலுக்கு உள்ளடக்கப்படல் வேண்டும். |
| (ஆ) மாத்தறை மாவட்டத்தினுள் செயற்படுத்தப்படுகின்ற ரூபா 234.7 மில்லியனான மதிப்பிடப்பட்ட பெறுமதியுடைய செயற்திட்டமொன்றில், செயற்திட்ட காலம் முடிவடைந்து 290 நாட்கள் கடந்திருப்பினும், ஒப்பந்தத்தில் 76.58 சதவீதம் இன்னுமாக நிறைவேற்றுவதற்கு எஞ்சியிருந்தமையினால் தாமதம் மற்றும் தண்டப்பணம் அறவிடப்பட வேண்டியிருந்தது. | கொவிட் தொற்றினால் தாமதமாகல், இறக்குமதி பொருட்கள் மட்டுப்படுப்படுத்தப்படல் மற்றும் அடிப்படை கட்டுமான பொருட்கள் குறைவடைகின்றமை தாக்கமளித்திருந்ததுடன் இந்த செயற்திட்டத்திற்குரியதாக காலம் நீட்டிப்பதற்காகவும் ஒப்பந்த கம்பனி கோரிக்கையொன்று சமர்ப்பித்து தற்போது ஆய்வு செய்து வருகின்றது. | ஒப்பந்த பணிகள் தாமதமின்றி நிறைவேற்றப்பட வேண்டியதுடன், தாமதமாகும் செயற்திட்டங்களிலிருந்து ஒப்பந்தத்தின் பிரகாரம் தாமதக் கட்டணம் அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

### 3.8 ஏனைய நிறுவனங்களிற்கு விடுவிக்கப்பட்ட வளங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) அதிகார சபைக்கு சொந்தமாக கிரயம் ரூபா 122 மில்லியனான 44 வாகனங்கள் மற்றும் எந்தவொரு கிரயமும் குறிப்பிடப்படாத 15 வாகனங்கள் என 59 வாகனங்கள் முறையே நெடுஞ்சாலைகள் அமைச்சிற்கு மற்றும் இராஜாங்க அமைச்சிற்கு மற்றும் சனாதிபதி செயலாளர் அலுவலகத்திற்கு பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்தது. | அது தொடர்பான தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. | அதிகார சபைக்கு சொந்தமான சொத்துக்கள் ஏனைய நிறுவனங்களுக்கு விடுவிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு சொந்தமான அதிகார சபையின் பிரதான கட்டிடத்தில் 72,400 சதுர அடி அளவில் வீதி அமைச்சு மற்றும் இராஜாங்க அமைச்சினால் பயன்படுத்தப்படுகின்றதுடன் அதற்குரிய வருடாந்த தேய்மானம் ரூபா 11.87 மில்லியன் மற்றும் மின்சாரம், நீர், தொலைப்பேசி, பாதுகாப்பு செலவு உள்ளடங்கலாக பொதுப்பணி செலவினங்களும் அதிகார சபையினால் ஏற்கப்பட்டிருந்தது. | இது தொடர்பாக வரிசை அமைச்சுடன் தொடர்ந்தும் கலந்துரையாடி பொருத்தமான நடவடிககைகள் எதிர்காலத்தில் எடுக்கப்படும். | பொது பணி செலவு பொருத்தமான அடிப்படையொன்றின் கீழ் குறித்த நிறுவனங்களிடமிருந்து அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (இ) அதிவேக வீதி இயக்க, பராமரிப்பு மற்றும் முகாமைத்துவ பிரிவினால் அதிவேக வீதி பொலிஸ் பிரிவிற்காக 49 வாகனங்கள் பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்ததுடன் அதற்காக ஏற்கப்பட்ட செலவினம் ரூபா 185.5 மில்லியனாக காணப்பட்டது. | அதிகாரசபையினால் வாடகை கட்டணமாக ஏற்கப்பட்டுள்ள ரூபா 189.5 மில்லியனில் ரூபா 185.5 மில்லியன் அதிவேக வீதி இயக்கம், பராமரிப்பு மற்றும் முகாமைத்துவ பிரிவுகளுக்காக ஏற்கப்பட்டுள்ளது. | அதிவேக வீதி பொலிஸ் செலவினம் தொடர்பாக முறையான கொள்கையொன்று பொலிஸ் திணைக்களத்துடன் இணக்கத்துடன் தயாரிக்கப்படல் வேண்டும். |

### 3.9 மனிதவள முகாமைத்தும்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2021 திசெம்பர் 31 இல் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 11,277 ஆக காணப்பட்டதுடன் ஒட்டுமொத்த வெற்றிடங்கள் எண்ணிக்கை 1,044 உம், 630 உத்தியோகத்தர்களின் மிகையும் காணப்பட்டது. அதில் சிரேஷ்ட முகாமைத்துவ மட்டத்தில் 26 வெற்றிடங்கள் காணப்பட்டதுடன், 04 பதவிகளில் மிகையும் காணப்பட்டது. | வெற்றிடங்கள் நிரப்புவதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | அதிகார சபையின் மனித வளம் வினைத்திறனாக பயன்படுத்தப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2021 ஆம் ஆண்டில் ஊழியர் சம்பளம் மற்றும் ஊதியங்களாக அதிகார சபையினால் ஏற்கப்பட்டிருந்த ஒட்டுமொத்த செலவினம் ரூபா 11,877 மில்லியனாக காணப்பட்டதுடன், அதற்காக பொது திறைச்சேரியிடமிருந்து பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்த நிதியேற்பாட்டிற்கு மேலதிகமாக ரூபா 4,129 மில்லியன் அதிகார சபையின் நிதியிலிருந்து சம்பளம் மற்றும் ஊதியங்களாக செலவு செய்யப்பட்டிருந்தது. | அதிவேக வீதி ஊழியர்களின் சம்பள கொடுப்பனவு மற்றும் அதனுடனான செலவினங்களுக்காக ரூபா 1,839.89 மில்லியன் அதிவேக வீதி வருமானத்தினை பயன்படுத்தி கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளதுடன், முதலீட்டு வட்டி வருமானம் ரூபா 699.75 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. சம்பளம் செலுத்துவதற்காக தேவையான எஞ்சிய தாகை அதிகார சபையினால் ஈட்டப்பட்ட ஏனைய வருமானங்கள் ஊடாக பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. | முறையான அங்கீகாரத்தின் கீழ் மேலதிக செலவினங்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டு இறுதி வரையிலும் அதிகார சபையினால் ஆட்சேர்ப்பு நடைமுறையொன்று தயாரித்து முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்தினை பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | நிலவுகின்ற பல்வேறு திருத்தங்கள் காரணத்தினால் இதுவரையில் ஆட்சேர்ப்பு நடைமுறையொன்று அங்கீகரிக்கப்படவில்லை. | முறையான மற்றும் வினைத்திறனான மனிதவள பயன்பாட்டிற்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் ஆட்சேர்ப்பு நடைமுறையொன்று நடைமுறைப்படுத்தல் வேண்டும். |